**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**Case No.** **CC.No.242/2022**

Deposition of **PW-2/ LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | வீரலட்சுமி | **Age** | : | 36 |
| **Husband's Name** | : | சென்றாயன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | கூலி |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07 day February 2026.**

எதிரிஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி மனு எண். 1775/2025-ன் கீழ் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) எதிரி எனது கணவர் என்றால் சரிதான். நானும், அவரும் 10 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான் 23.02.2021 ஆம் தேதி சம்பவம் நடந்தபோது நான், எனது தாயார் எனது மகன், எனது அக்கா ஆகியோர் வந்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம் விசாரித்தார்கள். அவ்வாறு விசாரித்த போதும் நாங்கள் 4 பேரும் வந்த விபரத்தை சொன்னோமா என்றால் சொன்னேன். 06.03.2021 ஆம் தேதி சம்பவத்தின் போதும் நாங்கள் நான்கு பேரும் தான் வந்தோம் என்றால் சரிதான்.

3) போலிசார் எங்களை விசாரித்தபோதும் நாங்கள் 4 பேர் வந்ததாக சொன்னோம் என்றால் சரிதான். மேற்படி இரண்டு சம்பவங்களும் போஜன் பார்க்கில் நடந்தது என்றால் சரியல்ல.. போஜன் பார்க் அருகே பழைய சம்பவம் நடந்தது. அதற்கு அடுத்து பழைய பஸ் ஸ்டாண்ட் அருகே ஒரு சம்பவம் நடந்தது .போஜன் பார்க் அருகே நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். வாகன போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். ஆள் நடமாட்டம் இருக்கும் என்றால்

சரிதான். முதல் சம்பவத்திற்கு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் நாங்கள் மருத்துவமனைக்கு சென்று விட்டோம், என் அக்காவிற்கு காயம். போலீசார் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

4) நாங்கள் டவுன் ஸ்டேஷனில் வந்து புகார் கொடுத்தோம் . போலீசார் எங்களை மருத்துவமனையில் வைத்து விசாரித்து வாக்குமூலம் வாங்கி கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஆமாம் இரண்டாவது சம்பவத்திற்கு நாங்கள் அரசு மருத்துவமனை சென்றோமா என்றால் இல்லை லேசாக தலைசுற்றல் இருப்பதாக என் அக்கா சொன்னார், அவரை வீட்டில் விட்டுவிட்டு நான் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன் புகார் எழுதிக் கொண்டார்களா என்றால் நான் போய் சொல்லிவிட்டு வந்தேன். நான் சொல்ல, சொல்ல அவர்கள் எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான் அந்த சம்பவத்திற்கு அங்கு எழுதி வாங்கியது தான் புகார் என்றால் சரிதான். 2–வது சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமும் நான்கு ரோடு செல்லும் பஜார் என்றால் சரிதான்.

5) அந்த இடத்தில் நிரந்தரமாக கடைகள் உள்ளது என்றால் சரிதான் . ஆள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான் . வாகன போக்குவரத்தும் இருக்கும் என்றால் சரிதான் 2–வது சம்பவம் நடந்த போது யாராவது பொதுமக்கள் வந்து விலக்கி விட்டார்களா என்றால் இல்லை. முதலாவது சம்பவத்திற்கு பொதுமக்கள் யாராவது வந்து விலக்கி விட்டார்களா என்றால் ஆமாம். பெண் பிள்ளையை மண்டையை உடைத்து விட்டாய் என்று சொல்லி வந்து விலக்கி விட்டார்கள். யார் ,யார் விலக்கி விட்டார்கள் என்று போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் பொதுமக்கள் விலக்கி விட்டதாக சொன்னேன்.

6)அவர்களின் பெயர், விபரம் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் அவர்கள் எங்களுக்கு தெரியாத நபர்கள். அந்த சம்பவத்திற்கு என் அக்கா எத்தனை நாள் மருத்துவமனையில் இருந்தார் என்றால் 7 நாட்கள் மருத்துவமனையில் இருந்தார் 7 நாட்கள் மருத்துவமனையில் இருந்து, அதன் பிறகு சென்று புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. அதற்கு முன்னமே

சொல்லிவிட்டோம் சிகிச்சை முடிந்து வர சொன்னார்கள். அதன் பிறகு சென்று புகார் கொடுத்தோம். அந்த புகார் யார் கொடுத்தது என்றால் என் அக்கா கொடுத்தார். அரசு மருத்துவமனையில் வைத்து புகார் கொடுத்தார் முதல் சம்பவத்திற்கு. 2 சம்பவத்திலும் எதிரி எந்த ஆயுதத்தால் தாக்கினார் என்ற விவரத்தை போல விசாரணையில் சொன்னோமா என்றால் ஆமாம் சொன்னோம். முதல் சம்பவத்தில் காருக்கான ஜாக்கி கம்பியை வைத்து அடித்தார் ,இரண்டாவது சம்பவத்தில் கட்டையை வைத்து அடித்தார். அந்த இரண்டு சம்பவத்திலும் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை போலீசார் கைப்பற்றிக் கொண்டார்களா என்றால் அவர் காரில் வைத்துக் கொண்டு சென்று விட்டார்.

7) அவரிடமிருந்து கைப்பற்றினார்களா என்ற விபரம் எனக்கு தெரியாது. இதற்கு முன்பும் நான் பல புகார் கொடுத்துள்ளேனா என்றால் அவர் பிரச்சனை செய்தார் கொடுத்துள்ளேன். நான் எத்தனை முறை புகார் கொடுத்து இருப்பேன் என்றால் அவரை திருமணம் செய்ததிலிருந்து ஸ்டேஷனுக்கும், வீட்டிற்குமாகத்தான் செல்வதாக இருந்தேன். 2 சம்பவத்திற்கும் போலீசார் எங்களை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் . என்னை என் கணவர் விவாகரத்து செய்ய வேண்டி தேனி, நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் விவாகரத்து வழங்கப்பட்டு விட்டது என்றால் சரிதான்.விவாகரத்திற்கு எதிராக நான் மேல் முறையீடு செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன் . மேல்முறையீட்டு வழக்கு எனக்கு எண் என்ன என்றால் நான் படிக்கவில்லை, எனக்கு தெரியாது.

8) இந்த 2 சம்பவத்திலும் எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் வலது கையில் மட்டும் அடித்தார். முதல் சம்பவத்தில் வலது கையில் என்னை அடித்தார். நான் மருத்துவரிடம் சிகிச்சை பெற்று இருந்தேனா என்றால் அரசு மருத்துவமனையில் ஊசி போட்டுக் கொண்டேன். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், என் அக்காவிற்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிர்க்கும், எந்த சம்பந்தமும் இல்லை என்றும் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில்

திட்டமிட்டு கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரியல்ல . இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.02.07 18:35:23 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**